தேர்தலில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து

# மெட்ரோ ரெயில் நிலையத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

சென்னை, மார்ச்.28-

தமிழக சட்டமன்ற தேர்தல் வரும் ஏப்ரல் 6-ந்தேதி நடைபெற உள்ளது. இதையடுத்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் வாக்களிப்பதன் அவசியம் மற்றும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்தி வருகிறது.

சென்னை விம்கோ நகர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து டாக்டர் எம்.ஜி.ஆர். சென்ட்ரல் மெட்ரோ வரை மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து விமான நிலையம் மெட்ரோ வரை செல்லும் (கோயம்பேடு வழியாக) மெட்ரோ ரெயிலில் மெல்லிசை விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

மேலும் டாக்டர் எம்.ஜி.ஆர். சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலைய வளாகத்தில் வாக்களிப்பதன் அவசியம் மற்றும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர். மேற்கண்ட தகவல் அனைத்தும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.